# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1503/8 - 2007 ජූනි 27 වැනි බදාදා - 2007.06.27

*1503/8 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 11/80* III.

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச்சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின்கீழ் உணவு மதியுரைக் குழுவின் கலந்துரையாடலுடன் சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

நிமால் சிறிபால டீ சில்வா,
சுகாதாரப் பராமரிப்பு மற்றும்
போசாக்கு அமைச்சர்.

கொழும்பு,
2007.06.14.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2007 ஆம் ஆண்டின் உணவு (வினாகிரி நியமங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2007 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆளெவரும், பின்வரும் வகைகளிலான வினாகிரி கூட்டுச்சேர்க்கை நியமங்கள் இவ்வொழுங்குவிதிகளுடன் ஒத்தவையாக இருந்தாலன்றி அத்தகைய வினாகிரியை விற்பனை செய்தலோ, விற்பனைக்காக முனைதலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ, கொண்டு செல்தலோ, விநியோகித்தலோ, விளம்பரப்படுத்தலோ, களஞ்சியப்படுத்தலோ அல்லது பயன்படுத்தலோ ஆகாது.

(i) தெங்கு வினாகிரி ;
(ii) தெங்கு இளநீர் வினாகிரி ;
(iii) மாவூறல் வினாகிரி ;
(iv) வைன் வினாகிரி ;
(v) சைடர் வினாகிரி ;
(vi) பழ வினாகிரி ;
(vii) மதுசார வினாகிரி ;
(viii) காய்ச்சி வடித்த வினாகிரி ;
(ix) செயற்கை அல்லது தொகுப்பு வினாகிரி ;
(x) சுவையூட்டப்பட்ட வினாகிரி ;

3. வினாகிரி கூட்டுச்சேர்க்கை நியமங்கள் 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான வகைகளில் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) எல்லா வகை வினாகிரியும் :

(i) 4% ஐ விடக் குறையாத எம்/வி அசெற்றிக் அமிலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
(ii) கனிப்பொருள் அமிலத்தைக் கொண்டிருத்தல் ஆகாது ;
(iii) வினாகிரி புழுக்களற்றதாக இருத்தல் வேண்டும் (றேபட்டிக் அசெற்றி) ;
(iv) வர்ணப் பதார்த்தமாக கரமலைக் கொண்டிருக்கலாம் ;

(ஆ) செயற்கை வினாகிரி தவிர்ந்த வேறு வினாகிரி :

(i) மொத்தமாக திண்மங்களில் 1%ஐ விட குறையாத எம்/வி ;
(ii) 750ஐ விட குறையாத பேர்மங்கனேற்று சேர்மவுயிரகவாக்க (பேர்மங்கனேற்று ஒக்சிடேசன்) பெறுமதி ;
(iii) 80ஐ விட குறையாத கார சேர்மவுயிரகவாக்க (அல்க்கலைன் ஒக்சிடேசன்) பெறுமதி ;
(iv) 160 க்குக் குறையாத அயடீன் பெறுமதி ;
(v) 1% ஐ விஞ்சாத எரிபொருள் எச்ச எதயில் அற்ககோல் எம்/வி

கொண்டிருத்தல் வேண்டும்.

4. ஆளெவரும், எந்த உணவின் தயாரிப்பில் 2 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வினாகிரி வகை சேர்க்கப்பட்டுள்ளதோ அவ்வாறு சேர்க்கப்பட்ட வினாகிரி கூட்டுச்சேர்க்கை நியமம் 3 ஆம் ஒழுங்குவிதியுடன் ஒத்தவையாக இருந்தால் அன்றி ஏதேனும் உணவை உற்பத்தி செய்தலோ, விற்பனை செய்தலோ, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலோ, கொண்டு செல்லுதலோ, விநியோகித்தலோ, களஞ்சியப்படுத்தலோ, விளம்பரப்படுத்தலோ அல்லது பயன்படுத்தலோ ஆகாது.

5. (1) வினாகிரியின் ஒவ்வொரு போத்தலிற்கும் அல்லது ஒவ்வொரு கொள்கலனிற்கும் சுட்டுத்துண்டிடுதல் தொடர்பில் 2005 ஆம் ஆண்டின் சனவரி 19 ஆந் திகதிய 1376/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) ஒழுங்குவிதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) வினாகிரியின் ஒவ்வொரு போத்தல் அல்லது ஒவ்வொரு கொள்கலன் மீதான சுட்டுத்துண்டு 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடல் மற்றும் விளம்பரப்படுத்தல்) ஒழுங்குவிதிகளில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) எந்த மூலத்திலிருந்து அது பெறப்பட்டதோ அந்த மூலத்தின் பெயரை அதன் மீது கொண்டிருத்தல் ;

(ஆ) தாவர உற்பத்திகளை புளிக்கவைத்து தயாரிக்கும் போது தவிர "செயற்கை வினாகிரி" எனும் கூற்றைத் தாங்குதல் ;

(இ) சுவையூட்டப்பட்ட வினாகிரியின் விடயத்தில் அவ்வாறு சேர்க்கப்பட்ட சுவையைக் குறிப்பிடல்.

(உதாரணம் : 'எக்ஸ்' எனும் சுவை சேர்க்கப்பட்டுள்ளவிடத்து சுட்டுத்துண்டானது 'எக்ஸ்' சுவையூட்டப்பட்ட வினாகிரி எனும் கூற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.)

6. இவ் ஒழுங்குவிதிகளில் –

"தெங்கு வினாகிரி" என்பது கள் இறக்கற் செயல்முறையால் தென்னையின் (கொகொஸ் நியூசிபெரா) திறக்கப்படாத பாளையிலிருந்து பெறப்பட்ட வடிதல்களின் அற்ககோல் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் அசிறஸ் முறையில் புளிக்கவைத்தல் மூலமும் பெறப்பட்ட வினாகிரி என்று பொருளாகும் ;

"தெங்கு இளநீர் வினாகிரி" என்பது தெங்கு இளநீரை சர்க்கரையுடன் சேர்த்து அற்ககோல் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் அசிறஸ் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் பெறப்பட்ட வினாகிரி என்று பொருளாகும் ;

"மாவூறல் வினாகிரி" என்பது எந்த பார்லி மாவூறல் மாப்பொருள் உண்டுபண்ணல் மாத்திரம் சர்க்கரையாக மாற்றப்பட்டுள்ளதோ அந்த பார்லி மாவூறலை அற்ககோல் மற்றும் அசிறஸ் முறையில் புளிக்க வைத்தல் மூலம் பெறப்பட்ட வினாகிரி என்று பொருளாகும் ;

"வைன் வினாகிரி" என்பது திராட்சைகளின் சாறை அற்ககோல் மற்றும் அசிறஸ் முறைகளில் புளிக்க வைத்தல் மூலம் பெறப்பட்ட வினாகிரி என்று பொருளாகும் ;

"சைடர் வினாகிரி அல்லது அப்பிள் வினாகிரி " என்பது தூய புதிய அப்பிள் பழங்களைப் பிழிந்து பெற்ற சாற்றினை அற்ககோல் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் அசிறஸ் முறையில் புளிக்கவைத்தல் மூலமும் பெறப்பட்ட உற்பத்திகள் என்று பொருளாகும் ;

"பழ வினாகிரி " என்பது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பழங்களின் சாறுகளை அற்ககோல் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் அசிறஸ் முறையில் புளிக்க வைத்தல் மூலமும் செய்யப்பட்ட அப்பிள் வினாகிரி அல்லாத வினாகிரி என்று பொருளாகும். பழவினாகிரியானது பயன்படுத்தப்பட்ட பழத்தை அல்லது பழங்களின் இனங்களை வெளிப்படுத்துவதற்காக அவற்றின் முக்கியத்துவத்தின் வரிசைப்படி சுட்டுத்துண்டிடப்படுதல் வேண்டும் ;

"மதுசார வினாகிரி " என்பது காய்ச்சி வடித்த எதயில் அற்ககோலினை அசிறஸ் முறையில் புளிக்க வைப்பதன் மூலம் பெறப்பட்ட மதுசார வினாகிரி என்று பொருளாகும் ;

"காய்ச்சி வடித்த வினாகிரி " என்பது காற்றொழி வெற்றிடத்தில் காய்ச்சி வடித்த வினாகிரி மூலம் தயாரிக்கப்பட்ட நீரியலான உற்பத்தி என்று பொருளாகும் ;

"செயற்கை அல்லது தொகுப்பு வினாகிரி " என்பது உணவுத்தரத்தைச் சேர்ந்த அசெற்றிக் அமிலத்தினதும் பருகத்தகுந்த நீரினதும் கலவையொன்று என்று பொருளாகும் ; அத்துடன்

"சுவையூட்டப்பட்ட வினாகிரி " என்பது மிளகாய், வெள்ளைப்பூண்டு, பூண்டு அல்லது நறுமணச் சரக்குகளின் பிழிந்தெடுத்தல்கள் மூலம் வினாகிரிக்கு பண்புச் சுவையினை உண்டுபண்ணச் செய்வதற்காகச் செய்யப்பட்ட லினாகிரி என்று பொருளாகும் ;

7- 210

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.